## சான்றிதழ் மற்றும் பட்டயப் பயிற்சி

## மூலிகை உடலியக்க மருத்துவ கல்வித்திட்டத்தின் குறிக்கோள்:

மூலிகை உடலியக்க மற்றும் தொடுசிகிச்சை எனப்படும் மருத்துவ முறை தமிழகத்தின் பாரம்பரிய, பக்கவிளைவு ஏதுமற்ற மருத்துவ முறையாகும். வழிவழியாக அறியப்பட்ட நமது சுற்றத்தில் இயற்கையாக கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டே எண்ணெய், லேகியங்கள், சூரணங்கள் உருவாக்கபட்டு அதன் மூலம் எப்பெரும் நோய் பிணிகளை களைந்து ஆரோக்கியமாக வாழ வழிவகுத்த பாரம்பரிய, மற்றும் எளிய மருத்துவ முறையாகும். மூலிகை மருத்துவங்களைக் கொண்டே தசைக்கு வலிமையையும், மூட்டுகளுக்கு அசைவுகளையும் கொடுக்கவல்லது மற்றும் வலியையும் குறைக்கவல்லது. இவ்வகையான நமது பாரம்பரிய மருத்துவ முறைகளைக் கொண்டு மருந்து, மாத்திரை, ஊசி இல்லாமல் நோய்களை குணமாக்க முடியும் என்பதை நிரூபித்தும் இருக்கிறது. உதாரணமாக சமீபத்திய டெங்கு போன்ற காய்ச்சலுக்கு நமக்கு நிவாரணம் வழங்கியது. நமது பாரம்பரிய மருத்துவம் கற்று கொடுத்த பப்பாளி இலைச் சாறே. இதே போன்று எண்ணிடலங்கா உதாரணங்களைக் காட்டலாம்.

இவ்வகையான பாரம்பரிய முறைகளை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கொண்டுசென்று எளிய முறையில் பிணிகளை நீக்கி ஆரோக்கியமான சந்ததிகளை உருவாக்க இம்மருத்துவ முறையின் செயல்படும் பின்னனி குறித்த அறிவியல் தெளிவும் வேண்டும். அந்த அறிவியல் தெளிவு விளக்கத்துடன் இப்பாரம்பரிய மருத்துவ முறைகளை கிராமங்களில் மகளிர் மற்றும் பல்வேறு இளைஞர்களுக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் இந்த வகையான எளிய மருத்துவம் நீண்ட காலம் நிலைத்து நமது சந்ததிகளை குறைந்த செலவில் காக்கும். அதே சமயத்தில் உலகின் அனைத்து இடங்களுக்கும் இம்மருத்துவத்தை கொண்டுசெல்ல அறிவியல் விளக்கங்களுடன் செயல்படுத்துவது கட்டாயம். இவ்வகையான தொலைநோக்குப் பார்வையுடன் இப்பாரம்பரிய மருத்துவத்தை ஆண் பெண் அனைவருக்கும் கொண்டுசெல்வதன் மூலம் அவர்களுக்கும் இம்மருத்துவ முறைக்கும் உலகளாவிய வணிகங்களை உருவாக்கி தர இயலும். இவ்வகையான பாரம்பரிய மருத்துவ முறைக்கு எளிய அறிவியியல் இணைப்பு கொடுக்க வெகுகாலங்களாக இத்துறையில் ஈடுபட்டியிருக்கும் நிறுவனத்துடன் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் இணைந்து அவர்களது அனுபவங்களை இவ்வாராய்ச்சிக்கு இணைத்து பாடத்திட்டங்களை உருவாக்கி அதை இப்படிப்பில் இணையும் மாணவர்களுக்கு பயிற்சியுடன் கொண்டுசென்று சேர்ப்பதே நோக்கமாகும். அனுபவமிக்க சிறந்த பயிற்றுநர்கள் மற்றும் உரிய பேராசிரியர்களைக் கொண்டு பயிற்றுவித்து, தேர்வும் தமிழில் நடத்தப்படுவது சிறப்புக்குரிய ஒன்றாகும். மேலும் முடிவாக **தகுதியானவர்களை அடையாளம் கண்டு வேலை வாய்ப்புக்கான வழிவகைகளும் செய்து தரப்படும்.**

**<u>சான்றிதழ் படிப்பிற்குரிய விவரங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| பாடத்திட்ட இலக்கு | : | அறிவியல் சார்ந்தது<br>சான்றிதழ் (குறியீட்டு எண் 01) மற்றும் பட்டயச் பயிற்சி (குறீயீட்டு எண் 02) |
| பாடத்திட்டத்தின் கால அளவு | : | 6 மாதங்கள் மற்றும் 1 ஆண்டு |
| சேர்க்கைத்தகுதி | : | 10 ஆம் வகுப்பு தோல்வி (சான்றிதழ்) அல்லது 10 ஆம் வகுப்பு தேர்ச்சி (பட்டயச் பயிற்சி) |
| வயது | : | 18 வயதிற்கு மேல் |
| பயிற்று மொழி | : | தமிழ் |
| நேரம் | : | மாதத்தின் அனைத்து சனி மற்றும் ஞாயிறு கிழமைகள் (அல்லது) மேற்பார்வை குழுவால் முடிவு செய்யப்படும் காலம் |

**கல்வி பயிற்று முறை**

பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமைகளில் பாட வகுப்புகளும் ஞாயிற்றுக் கிழமைகளில் செய்முறை வகுப்புகளும் நடத்தப்படும் (அல்லது) மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டு பெரும்பான்மை மாணவர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு பாடவகுப்புகள் நடத்தப்படும் காலம் நேரம் முடிவு செய்யப்படும். 75 சதவிகித அளவிற்கு குறையாமல் வகுப்புகள். செய்முறை மற்றும் கருத்தரங்கத்திற்கு வரவேண்டும். 75% வருகை பதிவு இருந்தால் மட்டுமே மாணவர்கள் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். ஆண்டு முடிவில் தேர்வுகள் நடத்தப்படும்.

**சேர்க்கை கட்டண விபரம் :**

| | | |
|---|---|---|
| விண்ணப்ப படிவ கட்டணம் | : | ரூ. 250/- |
| கல்விக் கட்டணம் சான்றிதழ் பயிற்சி | : | ரூ. 5000/- |
| பட்டயப் சான்றிதழ் பயிற்சி | : | ரூ. 8000/- |

**தொடர்ப்புக்கு :**

முனைவர் **அ.அசோக்குமார்**
இயக்குநர் (பொறுப்பு)
வீரமணி மோகனா வாழ்வியியல் உயராய்வு மய்யம்
பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்
பெரியார் நகர், வல்லம் தஞ்சாவூர் – 613 403
செல்: 9789670874, மின்னஞ்சல் – dirvmc@pmu.edu